## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 42/2020 | Date : 12.01.2024 | PW1 |
|---|---|---|
| Name: முருகன் | S/o. **பழனியப்பன்** | |
| Evidence Recorded Time: 01.01 P.M. to 01.15 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வண்டி ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. வண்டிக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. சாட்சி சிவராஜ் என் மனைவியின் அக்கா மகன் என்றால் சரிதான். விபத்து நடந்த போது என் மனைவி அருகில் இருந்தாரா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் விபத்து சம்மந்தமாக நான் புகாரை கொடுத்தேனா என்றால் நான்தான் கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் தெரியாது என்று கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி, வருடம் தெரியுமா என்றால் 08.05.2007 ல் நடைபெற்றது. நான் எவ்வளவு ரூபாய்க்கு மருத்துவ பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூபாய் பதினைந்து லட்சத்திற்கு ஒப்படைத்துள்ளேன். நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு என்ன சேதம் ஏற்பட்டது என்றால் வண்டி முழுமைக்கும் சேதம் ஏற்பட்டுவிட்டது. எதிரி வந்த வாகனத்திற்கு என்ன சேதம் ஏற்பட்டது என்றால் எந்த சேதமும் ஏற்படவில்லை. நான் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது மருத்துவரிடம் நானே கீழே விழுந்துவிட்டதாக சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரே வந்த வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு எந்த அடியும் படவில்லை என்றால் சரிதான். நான் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் ஊருக்கு நான் வாகனத்தை ஓட்டி செல்வதற்கு முன்பே ஒரு கி.மீ துாரத்தில் டாஸ்மாக் கடை உள்ளது என்றால் சரிதான். நான் மது போதையில் சென்று இந்த விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அதிவேகமாக ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதால் தான் என் வாகனத்திற்கு அதிக சேதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடமிருந்து நஷ்டஈடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனு

தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.